## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் ஆண்டு முழுவதும்

# கலைஞர் நூற்றாண்டு விழா - கோலாகலக் கொண்டாட்டம் !

### மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவு! அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

காஞ்சிபுரம், மே 25 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் மறைமலைநகர், பொத்தேரியில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம்.ஓட்டல் கூட்ட அரங்கில் மாவட்ட கழக அவைத் தலைவர் த. துரைசாமி தலைமையில்நடைபெற்றது. மாவட்டக் கழக துணைச்செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், தலைமை தீர்மான குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வீ.தமிழ் மணி, எஸ்.ஆர்.எல். இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க. அன்புச்செல்வன், ஆதிமாறன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், செங்கை மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி. குணாளன், த.ஜெயகுமார், வே.கருணாநிதி, ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ், மாடம்பாக்கம் நடராஜன்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், வி.எஸ்.ஆராமுதன், ஏ.வந்தேமாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், நகரச் செயலாளர்கள் எஸ். நரேந்திரன், ஜெ.சண்முகம், எம்.கே.டி.கார்த்திக், எஸ். ஜ ப ரு ல் ல ா, கோ.சத்தியமூர்த்தி, பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர். சதீஷ்குமார், ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், ஆர். எஸ்.சங்கர், க.தேவேந்திரன், மூவரசம்பட்டு சதீஷ்,கே.எத்திராஜ், எம். செல்வகுமார், ம.கணேஷ்பாபு, செ.அருள்தேவி, இரா.பாஸ்கரன், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு, தொ.மு.ச.பேரவைச் செயலாளர் பொன்னுராம், சாய் ஜெயகாந்த் பாரதி,

கழக அணிகளின் நிர்வாகிகள் கோல்டு பிரகாஷ், செந்தில் தேவராஜ், ஜாகீர் உசேன், ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டம், தி.க.பாஸ்கரன், எஸ்.ஆல்பர்ட், ஆர். கோவிந்தன், எம்.எஸ்.கதிரவன், வி.ரவிச்சந்திரன், ஜான் தினகரன், தாம்பரம் மாநகரக் கழக நிர்வாகிகள் அனகை நரேஷ் கண்ணா, சேலையூர் சதாசிவம், செம்பாக்கம் கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**தீர்மானங்கள்**

நிறைவாக கூட்ட தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் தா. மோ.அன்பரசன் உரையாற்றினார். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும், தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே, வாழ்நாள் செயல்திட்டமாக கொண்ட ஓய்வறியா சூரியன், திருக்குவளையில் பிறந்து - திருவாரூரில் வளர்ந்து - உலகெங்கும் வாழும் தமிழர் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்து இருக்கும் நம் தமிழினத் தலைவர்,

நூற்றாண்டு நாயகர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் தமிழ்நாட்டு மக்களுக்காக அளித்த மக்கள் நலத் திட்டங்களையும், வரும் கால தலைமுறையினர் அவரை என்றென்றும் நினைவில் கொள்ளும் வகையில், அவரது நூற்றாண்டு விழாவை வருகிற ஜூன் 3ஆம் தேதி தொடங்கி, அடுத்த ஆண்டு 2024, ஜூன் 3ஆம் தேதி வரை ஓராண்டு காலம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும் கிளை கழகங்கள் - வட்ட கழகங்கள் தொடங்கி, பேரூர் - நகரம் - ஒன்றியம் - பகுதி - மாநகரம் - மாவட்ட கழகம் வரை, தொண்டர்களின் இல்லவிழாவாக - மக்கள் விழாவாக, பட்டிதொட்டியெங்கும் கோலகலமாக கொண்டாடுவது என்றும்,

ஆண்டு முழுவதும் எழுச்சியாக கொண்டாடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க ஏகமனதாக தீர்மானிக்கிறது.

**முழு உருவ – மார்பளவுச் சிலைகள்!**

எங்கெங்கும் கலைஞர் என்ற அடிப்படையில் கலைஞர் அவர்களின் முழு உருவச் சிலையை, மார்பளவு சிலைகளை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நம்முடைய உயிரனைய தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கழக உயர்நிலை செயல் திட்டக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி,

காஞ்சி வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில், குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், பெரிய பணிச்சேரியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு உருவச் சிலையை நிறுவிடுவது என்றும், அதே போல், மாவட்டம் முழுவதும் மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் சார்பில் கலைஞர் அவர்களின் மார்பளவுச் சிலைகளை அமைப்பதற்காக அரசின் விதிமுறைகளை பின்பற்றி, அனுமதி பெற்று அமைப்பது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி 'ஊர்கள் தோறும் தி.மு.க' எனும் தலைப்பில் கிளைக் கழகங்களில் அமைந்துள்ள பழைய கொடிக் கம்பங்களை புதுப்பித்து, ஊர்கள் தோறும் கொடியேற்றும் விழாக்களை மிகவும் எழுச்சியுடன் நடத்திடுவது என்றும், ஏற்கனவே உள்ள கழக படிப்பகங்களை, மாறி வரும் இன்றைய சூழலுக்கு ஏற்ப கணிணி, இன்டர்நெட் வசதிகளுடன் கூடிய நவீனமான கலைஞர் நூற்றாண்டு படிப்பகங்களை தொடங்கிடுவது என்றும், அப்படிப்பகங்களை பொது மக்களுக்கு உதவிடும் மையங்களாக திகழ்ந்திட உரிய ஏற்பாடுகளை செய்திடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஒரு மனதாக முடிவெடுக்கிறது.

**புகழ் பரப்பும் பாடல்கள்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு வருகிற ஜூன் 3ஆம் தேதி அன்று காலை 9.00 மணியளவில் மாவட்டம் முழுவதும் பகுதி ஒன்றிய நகர பேரூர்களில் உள்ள அனைத்து கிளைகளிலும் கழக கொடி தோரணங்களைக் கட்டி, முத்தமிழறிஞர் கலைஞர் - தலைவர் தளபதி ஆகியோர் புகழ் பரப்பும் பாடல்களையும், அவர்கள் உரையாற்றிய எழுச்சியான பேச்சுக்களையும் ஒலிபரப்பி, அந்தந்த கிளைகளில் உள்ள கழக முன்னோடிகளை வைத்து, கழகத்தின் இருவண்ணக் கொடியை ஏற்றி, இனிப்புகளை வழங்கி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டமே விழாக் கோலம் பூணுகின்ற வகையில் நம்முடைய ஒப்பற்றத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை மிகவும் பிரம்மாண்டமான முறையில் எழுச்சியுடன் கொண்டாடுவது என காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒரு மனதாக முடிவெடுக்கிறது.

மேலும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள முதியோர் இல்லம் கருணை இல்லம் பார்வையற்றோர் பள்ளி மாற்றுத் திறனாளிகள் தங்கும் இல்லம், மனநலம் குன்றியோர் தங்கும் விடுதி, தொழுநோயாளிகள் இல்லம் ஆகியவற்றில் தங்கியுள்ள ஆதரவற்றோர்கள் அனைவருக்கும் வருகிற ஜூன் 3ஆம் தேதி அன்று அறுசுவை உணவு வழங்குவது என்றும், அத்துடன் இரத்ததான முகாம் மருத்துவ முகாம் கண் சிகிச்சை முகாம் நடத்துதல், மரக்கன்றுகளை நடுதல், ஏழை எளியவர்களுக்கு வேட்டி சேலை வழங்குதல், ஏழை எளிய பள்ளி மாணவ மாணவியர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங்களை வழங்குதல் ஜூன் 3ஆம் தேதியன்று செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, குரோம்பேட்டை மற்றும் திருப்போரூர் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கும் தங்க மோதிரம் அணிவிப்பது உள்ளிட்ட மக்கள் நலத் திட்ட உதவிகளை சிறப்பான முறையில் வழங்குவது என்று ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

**என்றென்றும் கலைஞர்!**

ஈராண்டு ஆட்சியில் எண்ணிலடங்கா திட்டப் பணிகளை நிறைவேற்றி ஈடில்லா சாதனைகளை படைத்த சரித்திரத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான மக்கள் நலன் காக்கும் கழக அரசின் சாதனைகளை விளக்கியும், "என்றென்றும் கலைஞர்" என்ற தலைப்பில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் வருகிற ஜூன் 1ஆம் தேதி முதல் ஜூலை 30ஆம் தேதி வரை, ஜூன் மாதம் முழுவதும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழா மற்றும் கழக அரசின் ஈராண்டு சாதனை விளக்க தொடர் பொதுக்கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள், சிறப்பு கருத்தரங்கம் மற்றும் சிறப்பு பட்டிமன்றங்களை நடத்துவதென காஞ்சி வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக தீர்மானிக்கிறது. மேலும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் கழகத்திற்காக அரும்பாடுபட்டு உழைத்திட்ட கழகத்தின் ரத்த நாளங்களாக விளங்கும் கழகத்தின் மூத்த முன்னோடிகளின் இல்லங்களுக்கு, கழக மாவட்ட செயலாளர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் நேரில் சென்று கவுரவிக்க வேண்டுமென்று கழக உயர்நிலை செயல் திட்ட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, வருகிற ஜூன் 3ஆம் தேதி கழக கொடியேற்று விழா நடத்திய பின்னர், கழக மூத்த முன்னோடிகளின் இல்லத்திற்கு மாவட்ட கழக முன்னணியினர் அனைவரும் சென்று மலர்மாலை, பொன்னடை அணிவித்து கவுரவிப்பது என்றும், கழகத்தின் கவசமாக திகழும், கழகத்திற்காக அரும்பாடுபட்டு உழைத்த, 70 வயதிற்கும் மேற்பட்ட கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு, கழகமே குடும்பம் எனும் தலைப்பில், மாநகரபகுதிஒன்றியநகரபேரூர் அளவில் பொற்கிழிகளை வழங்கிடுவது என்றும்; அத்துடன் இளைஞர்கள், மாணவர்கள் பங்கேற்கும் வகையிலான பல்வேறு போட்டிகளை நடத்தி, அவர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் எழுதிய புத்தகங்களை பரிசாக வழங்கிடுவது என்றும் மாவட்ட கழகத்தின் சார்பில் கழக குடும்பங்களை சேர்ந்த 100 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கிடுவது என்றும் காஞ்சி வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறினார்.




மறைமலைநகரில் நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். அருகில் மாவட்ட கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உள்ளனர்.

## சென்னை கிழக்கு மாவட்டக் கழக

# சார்பு அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!



### மாவட்ட கழகச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பு அணிகளின் ஆலோசனைக் கூட்டம் இன்று (25.5.2023) வியாழக்கிழமை கீழ்க்கண்ட இடங்களில் குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறும்:

**நாள் : 25.05.2023 – வியாழக்கிழமை**

| நேரம் | அணிகளின் விவரம் | இடம் |
|---|---|---|
| மாலை 4 மணி | மாணவர் அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை வழக்கறிஞர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி மருத்துவர் அணி, இலக்கிய அணி | மகேஷ் மகால், பெரம்பூர் பேரக்ஸ் சாலை |
| மாலை 5 மணி | வர்த்தகர் அணி ஆதிதிராவிடர் நல உரிமை பிரிவு சிறுபான்மையினர் அணி, பொறியாளர் அணி, தொண்டர் அணி | ஜி.பி.மகால் ஸ்டாரன்ஸ் சாலை ஓட்டேரி |

இக்கூட்டத்தில் மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து அணிகளின் மாவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் **பி.கே. சேகர்பாபு**

செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.




சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் தெற்கு பகுதியில் 75 வது வட்ட நிர்வாகிகள் மற்றும் (BLA 2) பாகமுகவர்கள் கழகப் பிறஅணிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும், இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரமான பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி, வட்ட கழக செயலாளர் வீ.கா.வெங்கடேசன் தலைமையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.லோகேஷ் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, பகுதி கழக செயலாளர் எம்.சாமிகண்ணு, மு.தம்பிதுரை, டி.ரமணிலோகேஷ், நா.துலுக்கான, ச.வனஜாசண்முகம், பி.சுகுமார், வெல்டிங் எஸ்.பாபு, அ.விஜயகுமார் மற்றும் மு. ஆதிகேசவன், வில்கிண்ஸ், மதிவாணன், தேவி, விஜயகுமார், ப.உதயச்சந்திரன், சுதாகர், நந்தகோபால், மணிகண்டன், மாணிக்கம், மாசிலாமணி மற்றும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## இந்திய குடிமைப் பணித் தேர்வில்

# முதலிடம் பெற்ற கொளத்தூர் ஏ.எஸ்.ஜீஜீக்குப் பாராட்டுக்கள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, மே 25-

இந்திய குடிமைப் பணித் தேர்வில் தமிழ்நாட்டில் கடந்த ஆண்டைவிட அதிகம் பேர் தேர்வாகியுள்ளது கூடுதல் மகிழ்ச்சி அளிக்கிறது எனவும், தேர்வில் முதலிடம் பிடித்த கொளத்தூர் செல்வி ஏ.எஸ்.ஜீஜீக்குப் பாராட்டுக்கள் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**நேற்று வெளியான இந்திய குடிமைப் பணித் தேர்வில் கொளத்தூரைச் சேர்ந்த செல்வி ஏ.எஸ்.ஜீஜீ அவர்கள் தமிழ்நாடு அளவில் முதலிடம் பிடித்துள்ளார். அவருக்கு என் வாழ்த்துகளும் பாராட்டுகளும்!**

**கடந்த ஆண்டைவிட அதிகமான அளவில் தமிழ்நாட்டில் இருந்து மாணவர்கள் குடிமைப் பணிக்குத் தேர்வாகியுள்ளது எனக்குக் கூடுதல் மகிழ்ச்சி அளிக்கிறது.**

**தேர்வு பெறாதவர்கள் துவண்டு போகாமல் தொடர்ந்து முயலுங்கள். அடுத்தடுத்த ஆண்டுகளில் தமிழ்நாட்டில் இருந்து இந்திய குடிமைப் பணி (UPSC) தேர்வில் வெற்றி பெறுவோர் எண்ணிக்கை உயர வேண்டுமெனத் தமிழ்நாடு அரசு பல இலவசப் பயிற்சித் திட்டங்களை அறிவித்துள்ளது. அவற்றை அனைவரும் பயன்படுத்தி வெற்றிகண்டு நம் மாநிலத்திற்குப் பெருமை சேர்ப்பீர்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை! அமைச்சர்கள் கே.ஆர். பெரியகருப்பன் - வி.செந்தில்பாலாஜி - அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலை! இன்று

# மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி வே.ஆனந்தம் இல்ல மணவிழா!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்திவைத்து - வாழ்த்தி உரையாற்றுகிறார்!

சென்னை, மே 25-

**சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளரும், பெருநகர சென்னை மாநகராட்சி 176வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி வே.ஆனந்தம் புதல்வி வே. ஆ.அபிநயா-லோ.ஹரிஹரன் ஆகியோரின் திருமணத்தை, இன்று (மே 25), தேவகோட்டையில், கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.**



இம்மணவிழா பற்றிய விபரம் வருமாறு: -

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளரும், 176 வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி வே. ஆனந்தம் - திருமதி ரேவதி ஆனந்தம் ஆகியோரின் புதல்வி வே. ஆ. அபிநயா-பட்டுக்கோட்டை மு.லோகநாதன் - திருமதி ராஜலட்சுமி லோகநாதன் ஆகியோரின் புதல்வர் லோ.ஹரிஹரன் ஆகியோரின் திருமணம், இன்று (25.5.2023 -வியாழக்கிழமை காலை 10.30 மணி அளவில் தேவகோட்டை, ராம்நகரில் அமைந்துள்ள ஸ்ரீ தாய் மஹாலில் நடைபெறுகிறது.

மணவிழாவிற்கு - சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணி யன் தலைமை வகிக்கிறார்.

சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன், மின்துறை அமைச்சரும், கரூர் மாவட்டக் கழகச் செயலாளருமான வி.செந்தில் பாலாஜி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ். ஜோயல், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., நாகனி செந்தில்குமார், சு.சேகர், துரை கபிலன், பெரி. பாலமுருகன், கருணாகிட்டு ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

திருமணத்தை - கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மேலும் மணவிழாவில் - கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர் பாட்ஷா முத்து ராமலிங்கம், முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி. சென்னைப் பெரு நகர மாநகராட்சி மேயர் பிரியாராஜன், துணை மேயர் மு.மகேஷ் குமார், முன்னாள் எம்.எல்.ஏ., கே.ஆர்.இராமசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ப.தாயகம் கவி, ஜெ.எம்.எச்.ஹாசன் மௌலானா, எஸ்.மாங்குடி மற்றும் க. தனசேகரன் எம்.சி. வி.அசோக், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நேர்முக உதவியாளர் எம்.செந்தில், டாக்டர் மா.சு.இளஞ்செழியன், வேளச்சேரி பி. மணிமாறன் எம்.சி., ஜி.பி. ராஜா, கவிஞர் காசி முத்து மாணிக்கம், பாலவாக்கம், க.சோமு, ஆலப்பாக்கம் கு. சண்முகம், என்.நல்ல சேதுபதி, எஸ். குணசேகரன், பாலவாக்கம் த. விஸ்வநாதன் எம்.சி. பாலவாக்கம் மு. மனோகரன் எம்.சி., வேளச்சேரி எஸ். பாஸ்கரன் எம்.சி., வாசுகி பாண்டியன், இரா.துரைராஜ் எம்.சி., எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி., பெருங்குடி எஸ். வி.ரவிச்சந்திரன் எம்.சி., வி.இ. மதியழகன் எம்.சி., நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., கே. கண்ணன் எம்.சி., மு.இராசா எம்.சி., துரை வீரமணி, ஜி. வெங்கடேசன், கரூர் எஸ். பி.கனகராஜ் எம்.சி., இரா. தயாளன், நாகனி ஆர்.ரவி, வி.பூபால சிங்கம், லே.மு. ரவிச்சந்திரன் அடையாறு பி. ஜே.பாஸ்கர், ஆர்.பாலசுந்தரம், அ.ஹரி கிருஷ்ணன், சைதை சம்பத், சைதை மா. அன்பரசன், வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன், மேடவாக்கம் ப.ரவி, எம்.கே.ஏழுமலை, உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜன், பி. எஸ்.முருகேசன், மின்னல் கந்தப்பன், வீர.கனிமொழி, வ. செல்வகுமார், த.பஷீர் உள்பட பலரும் உள்பட பலரும் மணவிழாவில் கலந்து கொண்டு வாழ்த்துகிறார்கள்.

எம்.விநாயக மூர்த்தி, என். டில்லிகுமார், ஆர்.கே. சந்திரேஷ், எம்.எஸ்.விஸ்வா, வி. சண்முகநாதன், என். நல்லசேதுபதி, செ.பழனியப்பன், சி.சஞ்சீவி, பி.கே. சோம்ராஜ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## திராவிட மாடல் அரசின் 2 ஆண்டுகள் சாதனைகளை விளக்கி

# திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் இளைஞர் அணி சார்பில் தெருமுனை கூட்டம்!

### மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் இளைஞர் அணி சார்பில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையியான திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை விளக்கி தெருமுனை கூட்டங்கள் கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறும் விவரம் ;

நாள் ; இன்று 25-5-2023 நேரம் / மாலை 5.மணியளவில்

| பகுதி | தலைமை | பேச்சாளர்கள் | இடம் |
|---|---|---|---|
| பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் | ப.ச.கமலேஷ் | மரு.எழிலன் | காட்டுபாக்கம் |
| ஆவடி வடக்கு பகுதி | ஜி.நாராயண பிரசாத் | மரு. எழிலன் | 20 வதுவார்டுதண்டுரை |
| பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் | டி.தேசிங்கு | தாயகம் கவி | நடுகுத்தகை |
| திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் | புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன் | குடியாத்தம் குமரன் | ஈக்காடு |
| திருமழிசை | தி.வே.முனுசாமி | கா.மு.ஜான் | 10 வதுவார்டு ஜவகர்தெரு |
| திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் | ஆர்.ஜெயசீலன் | எஸ்.கே.பி.கருணா | அரண்வாயல் |

எனவே மேற்குறிப்பிட்டுள்ள தெருமுனை கூட்டங்களுக்கான ஏற்பாடுகளை அந்தந்த பகுதி. ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக செயலாளர்கள் ஒத்துழைப்புடன் அந்தந்த பகுதி. ஒன்றிய கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஏற்பாடு செய்கிறார்கள், இக்கூட்டங்களில் அந்தந்த பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள், இளைஞர் அணி. மாணவர் அணி, மகளிர்அணிமற்றும்அனைத்து அணிகளின்நிர்வாகிகள் அனைவருக்கும். தகவல் தந்து அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பாக நடத்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**ஆவடி சா.மு.நாசர்**

செயலாளர் - திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக

